ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

நம் பாரதபூமியிலும் காலமஹிமையால் பலவிடங்களில் ஆசாரசீர்திருத்தம் வெகுவாகப் பரவுகிறது. அந்த சீர்திருத்தத்தை ஆர்யச்சிறுவர்களும் ஆதரித்துவரும்படி திருத்தக்காரர்கள் செய்துவிடுகிறார்கள். இச்சீர்திருத்தக்காரர்களின் முக்கியமான கொள்கைகள் பலவுள. அவைகளுள் ஜாதிபேதத்தையொழித்தல், விதவாவிவாஹம் செய்வித்தல், விவாஹச்செலவைக் குறைப்பதென்ற வியாஜத்தால் அதை ஒரேநாளில் செய்து முடிக்க முயற்சித்தல். இவைகள் தற்போது வெகு விரைவாகப் பரவுகின்றன. அவற்றுள் ஜாதிபேதத்தையொழிப்பது ஒருபோதும் முடியாத கார்யம். அதையொழிக்கத் தலையெடுப்பவர்களுக்கு கைகண்டபலனாய் பலவிதத்தொல்லை நேரிடும். அல்லலுண்டாகும். ஜாதிபேதத்தை ஒழிப்பதற்கு முதலில் சாஸ்திரங்களை ஒழிக்கவேண்டும். சாஸ்திரங்களொழிந்தால் கடவுளுமில்லையென்று கூறநேரும். பின்னர் நிரீசுவரவாதம் பெருகி நாஸ்திகமதம் ஓங்கும், நியாயம் தவறிப்போம், அக்கிரமங்கள் அதிகமாக விருத்தியடையும். பின்னும் பல கெடுதல் திருஷ்டமாகவே உண்டாகும். ஆனதால் ஜாதிவித்தியாஸத்தை யொழிக்கமுயல்வது மதிக்குறைவேயாம்.

விதவாவிவாஹத்தைப்பற்றி பல பண்டிதர்கள் பலவிதமாகக் கண்டித்திருக்கிறார்கள். விவாஹவிஷயத்தில் வீண்செலவைக் குறைப்பது சாஸ்திரங்களுக்கும் பூர்வஸம்பிரதாயங்களுக்கும் விரோதமில்லாததுபற்றி யாவராலும் அங்கீகரிக்கத்தக்கதாகவேயாகும். சாஸ்திரவிரோதமில்லாதவைகளை அனுஸரிப்பது நன்மையே. பணச்செலவைக்குறைப்பதென்பதை வைதிககார்யங்களில்மாத்திரம் உபயோகப்படுத்திவிட்டு வீண்டம்பத்துக்காக வாணவேடிக்கைகளும், ஆட்டக்கச்சேரி,பாட்டுக்கச்சேரி சூதாட்டக்கச்சேரிகளும் வைத்து மிகுந்த திரவியத்தைச் செலவழிப்பது பணச்செலவைக் குறைப்பதாய்விடாது. ஆயிரம் இரண்டாயிரம் என்று பணத்தைச் செலவழித்து வாணவேடிக்கைகள் செய்து கரியாக்குவதில் என்ன பயன்? ஒரு நிமிஷநேரம் நேத்திரானந்தத்திற்காக பொருளைச் செலவிடுவது உசிதமாகுமா? தன் சக்திக்குமீறி ஊராரையெல்லாம் அழைத்து விருந்து செய்வது சரியா? ஊரார் மெச்சவேண்டி ஏழைகளும் கல்யாணத்திற்காக கடனை வாங்கி கால்நாழிநேரம் களிப்பது களிப்பாகுமா? நமது சிலபூர்வீக ராஜாங்கங்களும் தாஸிகளின் மயக்கத்தில் சிக்குண்டு ராஜ்யங்களையிழந்துவிட்டன. தாஸிகளால் பல பணக்காரக்குடும்பங்கள் நிர்மூலமாய்ப்போய்விட்டன, இம்மட்டோடில்லாமல் அநேகர் அவர்களுடைய மருந்திட்டால் மயக்கமடைந்து மதிகெட்டு அக்கினிஸாக்ஷிகமாக பாணிக்ரஹணம் செய்த பத்னியையும் சோற்றுக்கில்லாமல் பறக்கடித்து உடம்பு கெட்டு நோய் அடைந்து அவதிப்பட்டு இறந்துவிட்டனர். இவைகளையெல்லாம் கண்ணாரக்கண்டும், காதாரக்கேட்டும் தற்காலத்திய நாகரீகத்தந்தையர்கள் எந்த மதியைக்கொண்டு தங்கள் பிள்ளைக்கெதிரில் தாஸிகளின் ஆட்டத்தை வைக்கிறார்களோ தெரியவில்லை. இதெல்லாம் செலவைக்குறைக்கும் கார்யமில்லை. நம் சாஸ்திரங்களில் கூறியபடியும் பூர்வீகஸம்பிரதாயப்படியும் விவாஹாதிகார்யங்களைச் செய்து யாவரும் சிரேயஸ்ஸையடைவார்களாக.

சுபம்.

பத்திராதிபர்,

ஸ்ரீரஸ்து

உ

# ஆர்யதர்மம்.

பிரமோத-ஹூ ஐப்பிசி-மீ உ அவ

## வைதிகச்செலவு வீண்போகாது.

துவிஜாதிகளுக்கு சிரௌதஸ்மார்த்தாதி கர்மங்களைக் கணக்கில்லாமல் விதித்து காலத்தை வீணாக்கிவிட்டதோடில்லாமல் அந்த கர்மங்களுக்கு அங்கமாக தக்ஷிணாதானத்தையும் விதித்து செலவையுமதிகப்படுத்திவிட்டதாகவும் சிலபேர்கள் நினைக்கிறார்கள். அது சரியன்று, செலவைக் குறைக்கவேண்டுமென்று கருத்துடையோர் தற்போது லௌகிககாரியங்களில் செலவிடுவதைக் கணக்கிட்டால் அதில் ஆயிரத்திலொருபாகங்கூட வைதிகத்தில் செலவாகாது. லௌகிககார்யங்களில் செலவழித்தது முழுமையும் பயனுள்ளதாகவே ஆகுமென்று நினைக்கமுடியாது. அதில் வீணாய்ப் போவதுதான் அதிகம். அப்படி வீண்போகாது வைதிகவிஷயத்தில் செலவிட்டது, ஒன்றுக்கநேகமாக விருத்தியடையும். எதை நம்பி இப்படி நிச்சயிக்கப்படுகிறதெனில்—கடன் வாங்குபவன் வாங்கிக்கொண்ட பணத்தோடு வட்டியைச் சேர்த்து அதிகம் கொடுப்பானென்று எதை நம்பி அவனிடம் கடன் கொடுக்கப்படுகிறது. அவன் சீட்டு எழுதிக்கொடுத்திருக்கிறானென்றால் வைதிகக்ரியைகளிலும் ஒன்றுக்கனேகமாக பின்னிட்டுக் கிடைக்குமென்று சுருதிஸ்மிருதிபுராணாதிகளில் எழுதி வைத்திருப்பதே சீட்டுப்போலாகும். அதை நம்பித்தான் கொடுக்கவேண்டியது, அப்படிக்கொடுத்த புண்ணியத்தால்தான் அநேக தனவான்கள் கர்ப்பஸ்ரீமான்களாக ஜனிக்கின்றார்கள். பிறந்தது முதற்கொண்டே தாரித்ரியத்தால் கஷ்டப்படுகிறவர்கள் முன் பிறவிகளில் கொடுக்காத தோஷத்தால் துன்பப்படுகிறார்களாம். இப்படி தற்கால மேதாவிகள் நினைப்பதில்லை. இதற்கு விபரீதமாகவும் சில மேதாவிகள் நினைப்பதுண்டு. இதெல்லாம் பிரமாண

னுக்கொத்ததாகாது. காலக்கொடுமையால் வைதிகத்தில் நம்பிக்கையுள்ளவர்களும் வைதிகக்ரியைகளில் அங்கமாக விதிக்கப்பட்ட தக்ஷிணாதானத்தை உள்ளபடி செய்வதில்லை. உதாரணமாக சுபசோபனாதிகளில் பிதிருதேவதைகளின் திருப்திக்காக நாந்தி சிராத்தம் அன்னரூபமாகச் செய்யவேண்டியதென்றும், அதற்கு ஸம்பவிக்காவிடில் ஆமரூபமாயாவது ஹிரண்யரூபமாயாவது செய்யலாமென்றும், ஆனால் அன்னரூபமாகச் செய்வதைவிட ஆம ஹிரண்யரூபமாகச்செய்வதில் தக்ஷிணையை இரண்டுபங்கு நான்கு பங்காக முறையே கொடுக்கவேணுமென்று விதித்திருப்பதை நன்றாகத் தெரிந்துகொண்டவர்களும் அவ்விதமாகக் கொடுப்பதில்லை. அணாக்காலோ, காலோ கொடுத்து காரியத்தை ஓட்டிவிடுகிறார்கள். இதுபோலவே எல்லா காரியங்களிலும் குறைத்துவிடுகிறார்கள். அதனால் அந்த காரியங்கள் சரியாக நிறைவேறாத தோஷத்தால் நேர்ந்த கெடுதலை வேறு காரணத்தால் நேர்ந்ததாக நினைக்கிறார்கள். நல்ல காரியங்களில் செலவிடுவது வீண்போகாதென்று எல்லோருமறிவார்கள். ஆனால் நல்லது எது என்பதில் சிலர் விவாதப்படுவார்கள். அதைப்பிரமாணவாயிலாகத் தீர்மானிக்கவேண்டுமேயல்லாது சில கூட்டத்தார் சொல்லிவிட்டார் எனச் சம்மதிக்க முடியாது. பிரமாணநூல்களை ஆராய்ச்சிசெய்ய அதிகாரம் பெறாதவர் இதில் தலையிடுவதும் தகாத கார்யம். இந்த விவேகமில்லாமல் சிலர் அதை அங்கீகரிப்பதும் அனுசிதமேயாகும். ஆகையால் சுருதிஸ்மிருதிநியாயங்களில் தீர்மானிக்கப்பட்டபடி வைதிககாரியங்களில் அங்கமாக விதிக்கப்பட்ட தக்ஷிணாதானத்தைச் சரிவர செய்து எல்லோரும் அதனாலுண்டான ஸர்வசிரேயஸ்ஸையும் அடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

## தம்பதி தர்மம்.

(510–வது பக்கத்தொடர்ச்சி.)

4. साधुकारी साधुर्भवति, पापकारी पापोभवति ।

புண்யம் பண்ணியவன் புண்யவானாய்ப் பிறக்கிறான். பாபம் பண்ணியவன் பாபியாய்ப் பிறக்கிறான், என்ற வேத வாக்கியத்தின்படி ஸுக துக்கங்களுக்கு அவர் அவர் முன்செய்த வினையே காரணம் என்பதை நினைத்தல்.

**तत्वम् असि** - அது நீயாக இருக்கிறாய்.

**अयं आत्मा ब्रह्म** - இந்த ஆத்மா பிரும்மமயம்.

இது முதலாய வாக்ய த்யானம் செய்தல் சிந்தித்தல்

**त्वयि मयि सर्वत्र एकोविष्णुः व्यर्थं कुप्यसि मयि असहिष्णुः ।**

உன்னிடத்திலும் என்னிடத்திலும் எங்கும் விஷ்ணு ஒருவரே. ஸஹிக்காமல் நீ என்னிடத்தில் கோபிப்பது வீண்தானே.

**यत् तेकर्मोपात्तं वित्तं तेन विनोदय चित्तम् ।**

உன் கர்மத்தின்படி கிடைக்கும் தனம்உண்டு. அதைக்கொண்டே சித்தத்தை ஸந்தோஷப் படுத்திக்கொள்— என்ற ஆதி சங்கராசாரிய ஸ்வாமிகளின் ஸத்ய உபதேசமொழிகளை எப்பொழுதும் தம்பதிகள் இருவரும் மனதில் நினைத்துக்கொண்டு சம சித்தராய் குடும்பத்தை நன்றாய் நடத்திவர வேண்டும்.

வேதாந்த ஞானத்துடனே பற்றற்ற மனதுடன் வேதோக்த கர்மங்களையும் தினம் தினம் செய்து வருவதால்தான் சித்தசுத்தி ஏற்படும். சித்தசுத்தி ஏற்பட ஏற்பட காமக்ரோதம் அழிய ஆரம்பிக்கும். ஆசையும் கோபமும் ஆத்மாவைவிட்டு விலகினால்தான் சுத்த ஸாத்விக நிலையடைந்து அடக்கம் சாந்தம்பெறலாம். சாந்தமான தெளிவுற்ற நிலையில் ஈச்வரன் தன் வாஸத்தை விரும்புகிறான்.

**'यमेव एष वृणुते तेनैव लभ्यः'** உபநிஷத்

எவனை ஈசன் குறிப்பிடுகிறானோ அவனாலேயே அந்த பகவான் அடையப்படுகிறான்.

ஆகையால் தினம் பொழுதுவிடியுமுன் பத்நீ புருஷனைத்தூக்கத்திலிருந்து எழுப்பிவிட்டு இருவரும் பகவத்தியானம் செய்ய வேண்டும். பின் பத்னி தன் வீட்டுக்கார்யத்துக்கிடை இடையே பர்த்தாவுக்கு காலை கார்யங்களுக்கும் ஸ்னானத்துக்கும்வேண்டிய சௌகர்யங்களைச்செய்து, காலத்தில் சுத்திசெய்துகொண்டு ஸ்நானம் செய்யும்படி தூண்டவேண்டும். ஸந்த்யாவந்தனம் செய்வதற்குவேண்டித் தீர்த்தம்கொடுத்து இடவஸதிகள் தயாராக்கி கொடுத்து நன்றாய் ஸூர்ய வந்தனம் செய்யும்படி பிரார்த்திக்க வேண்டும். பத்னியின் அநுகூலத்தினாலும் உபதேசத்தாலும்,

ப்ரிய வாக்கினாலும், உபகாரத்தாலும், ஸாமக்கிரிகள் ஸமயத்தில் கொடுப்பதாலும், ஸமய உசித சுச்ரூஷையாலும் மனமில்லாத புருஷனும் மனம் உவந்து கர்மத்தில் கொஞ்சம் கொஞ்சமாக ப்ரவர்த்திப்பான்.

ஆறு கர்மங்களையும் அவச்யமாகப்பாராசர் குறிப்பிட்டாலும் ஸந்தியையாவது நன்றாய் ஒரு ப்ராம்ணன் செய்துவந்தால் அவன் ப்ராமண்யத்தினின்று நழுவமாட்டான் என்று அநேகம் ஸம்ருதி கர்த்தாக்கள் அபிப்ராயப்படுகிறார்கள் ஆதலால் தம்பதி இருவர்களுடைய கர்மத்தில்தான் பிறக்கும் குழந்தைகளின் லக்ஷணமும் அதிர்ஷ்டமும் யோகமும் பொருந்திருக்கிறது. கர்மானுஷ்டானத்தினாலும் ஈச்வரத்யானத்தாலும் பகவந்நாம ஜபத்தாலும்தான் முக்திய பாப ஸஞ்சிதை குறையும். பாபவாசனை விலக்கி நல்ல புண்ய கர்மங்களில் புத்தி செல்லும்

कामः अकार्षीत् காமம் (ஆசை) செய்தது.

मन्युः अकार्षीत् கோபம் செய்தது.

என்று தினம்ஸந்த்யாவந்தனத்துடன்நாம் அர்த்தமில்லாமல் சொல்கிறோம். இதை அர்த்த சிந்தனையுடன் சொல்லும்படி பத்னீ புருஷனுக்கு உபதேசித்துதான் அதின் பொருளை சிந்திக்கவேண்டும், 3-காலங்களிலும் பத்னீ பகவத்யானம் செய்யவேண்டும். எப்பொழுதும் நாம் ஜபம் செய்யவேண்டும்.

5 கௌடில்யர்என்னும்சாணக்யர்காமஸூத்ர ஆரம்பத்திலேயே

सुखस्यमूलं धर्मः ஸுகத்துக்கு காரணம் தர்மம்.

धर्मस्य मूलं अर्थः தர்மத்துக்குகாரணம் அர்த்தம் (பொருள்) என சொல்லிக்கொண்டே,

तस्मात् सर्वेषां कार्यसिद्धिर्भवति ।

அதிலிருந்து எல்லாவற்றிற்கும் கார்யம் ஸித்தி அடைகிறது என்றும் கூறினர்.

ப்ரதி ஜந்துவும் ஸுகத்தையே நாடுவதாலும், வித்தையின் முடிவாகிய வேதாந்தமும் துக்கலேசமற்ற ஸுகானுபவமே மோக்ஷம் என்று போதிப்பதாலும் ஒவ்வொருவரும் ஸுகம் பெறும் மார்க்கத்தை நாடவேண்டுமல்லவா? ஸுகம் எவ்விதம் கிடைக்கும் என்று நாம் தேடிக்கொண்டே அலைகிறோம். தர்மத்

தாலேயே ஸுகம் கிடைக்கிறதென்று மஹா அநுபவசாலியாகிய சாணக்யர் சொல்வதால் அதுவே ப்ரமாணம். ஸ்திரீ புருஷாளாகிய தம்பதிகள் எப்பொழுதும் ஒருமனமாக தர்மாசரணையை (சாஸ்த்ரங்களின் அபிப்ராயப்படி) நடத்துவதில் புத்தியை காட்ட வேண்டுமல்லவா? சாஸ்த்ர தர்மங்களை கூடியவரையில் நடத்திவரவும் குடும்பதர்மங்களை நடத்திவரவும் பொருள்வேண்டுமென்று நமக்குத் தெரிந்ததே, சாணக்யர் நோக்கமும் அதுவே.

"தீவினை விட்டு ஈட்டல் பொருள்"— (ஔவை) என்ற வாக்கின்படி நல்வழியில் ப்ரயத்தனப்பட்டு பொருள் ஸம்பாதிக்க வேண்டும். புருஷன் கொண்டுவந்து கொடுத்த பொருளை வைத்துக்கொண்டு ஸ்திரீ செட்டாக குடித்தனம்செய்து சந்தோஷமாக காலம் கழித்து பின் காலத்துக்கு கொஞ்சம் மீர்த்தும் வைத்துக் கொள்ளவேண்டும். பொருளாலல்லவா எல்லாக்கார்யங்களும் வித்தியடைகின்றன.

மனைவி அதிதிகள், அக்னிஹோத்ரம் தேவாராதனைகளுக்கு கண்டு மிஞ்சின பாலிலிருந்து நெய் எடுத்தல்; எள் முதலிய வித்துகளிலிருந்து எண்ணெய் எடுத்தல், பருத்தியிலிருந்து நூல்நூற்றல், நூலை நெய்தல், உறி, கயிறு, தும்பு, நாரு இவைகளைச் சேகரித்தல் குத்தல், தீட்டல் இவைகளைக்கவனித்தல் கழுநீர், கஞ்சி, உமி, நொய், தவிடு, கரி இவைகளை தகுந்தபடி உபயோகித்தல், வண்டிமாடு, குதிரைகளுக்கு வேண்டியதைத் தெரிந்து செய்தல், நாள்தோறும் வரவு செலவுகளை மொத்தம் கூட்டிக் கணக்கிடுதல், இந்தக் கார்யங்களைவிடாமல் கவனத்துடன் செய்யவேண்டும். வாத்ஸ்யாயன மஹரிஷி கூறுகிறார்—

> सद्वृत्तं अनुवर्तेव नायकस्य हितैषिणी ।
> धर्मं अर्थं तथाकामं लभन्ते स्थानमेवच ॥

நாயகனுடைய ஹிதத்தையே இச்சிக்கிறவளாக நல்ல ஒழுக்கத்திலே நடந்துவரும் ஸ்திரீகள் தர்மம், பொருள், இன்பம், மோக்ஷம் ஆகிய புருஷார்த்தங்கள் நான்கையும் அடைகிறார்கள்.

இல்லறம் ஒழுங்கானல் துறவறம் நாடுவானேன்?

ஸாரம், ரங்காச்சார்யன்.

---

# மீனாக்ஷீ பரிணயம்.

## 1-வது தரங்கம்.

பாண்டியநாட்டில், சந்திரவம்சத்திலிருந்து வளர்ந்தபிரசித்தி பெற்ற மேலான குலமொன்று உண்டு. அக்குலத்தில் உதித்த குலசேகர பாண்டியன் என்பவன், மதுரைமாநகரைத் தலைநகரா கக்கொண்டு, மீனாக்ஷி சுந்தரேச்வரர்களை வெகுகாலமாய் ஆராதி த்து, குலத்திற்கு சிரோபூஷணமான மலயத்வஜனை யடைந்தான். அவன் இளம்பிராயத்திலேயே புழுதி விளையாட்டிலுங்கூட சிவா லயங்களையேற்படுத்தி, விளையாடுவான். பின்பு கிரமமாய் வளர் ந்து தகப்பனால் உபநயனஞ் செய்விக்கப்பட்டு அக்குமாரன் குலகுருவான அகத்தியமாமுனிவரிடமிருந்து மறைகளையும், தகப்பனரிடமிருந்து வில்வித்தையையும் இயற்கையாகவே, உமை சிவபெருமான் இவர்களிடத்தில் அசைவற்ற பக்தியையும் கற்றுக் கொண்டான். குலசேகர பாண்டியன் கல்வியில் தேர்ச்சிபெற்று யௌவனப் பர்வம்பெற்ற இக்குமாரனை ஸ்ரீ தேவியோடு தர்மத் தைப்போல குலத்திற்கேற்றவளும் காஞ்சிநகரத்தரசருடைய குமாரியுமான காஞ்சனமாலையோடு கூட சேர்ப்பித்தான், பிறகு குலசேகர பாண்டியன் வணக்கமுள்ளவனும், அனுகூலமான தாம்பத்தியத்தால் சுகித்தவனுமான குமாரனைக்கண்டு பேரானந் தங் கொண்டான். பிறகு ஜகத்தின் பாரத்தைப் பிள்ளையினிடம் இறக்கக்கருதினவேந்தன் அவனுக்கு தர்மத்தையுபதேசித்தான்—

“குழந்தாய்! ஒருபொழுதும் இந்த ராஜ்ய வைபவத்தில் என்னு டையது என்ற எண்ணத்தை வைக்காதே. அக்னியில் சிவபெரு மானை யாராதனஞ்செய். சூரியபகவானிடம் சிவபெருமானை அர்ச்சனம் செய், ஹிருதயத்தில் சிவபெருமானை நினைத்துக் கொள், சிவபெருமானையே கீர்த்தனம் செய். பிராமணர்களி டம் சிவபெருமானை எப்பொழுதும் பூஜை செய். ஸகல ஜன்மாக்க ளாலும் சிவனையாராதனம் பண்ணு. எவ்வாற்றாலும் சிவனிடம் நிஷ்டையுள்ளவனாயிரு. அச்சிவனும் மதுரையம்பதியைக் காட்டி லும் வேறல்லவென்று சுந்தரேச்வரரை நம்பினவனாய் நீடூழிகால மாய் சுகமாகவே அரசாள்வாயாக” என்று இவ்விதம் உபதேசி த்து, வணக்கமுள்ள அவனிடம் ஜயாசிர்வாதங்களைக்கூறித் தன்

ஞல் சுமக்கப்பட்ட பூபாரத்தையும் இறக்கி சுகமடைந்தான். பிறகு அரசன் யோகபலத்தால் சரீரத்தைவிட்டு சாச்வதமான ஸ்தானத்தை யடைந்தான். புலன்களையடக்கின மலயத்வஜன், உலகம் அழிவுள்ளது என்பதையும் மிகக்கொண்டாடக்கூடிய தகப்பனின் கதியையும் அறிந்தவனாயினும், தபித்தமனதை வசமாக்கிக்கொள்ள முடியாதவனுன். அவன் சிரமப்பட்டுத்தனது தைர்யத்தைக் கைபிடித்து, தகப்பனுக்கு ஸகல கன்மாக்களையும் செய்து முடித்தான்.

சிங்காதனத்தில் மந்திரிகளால் ஏற்றப்பட்ட அவ்வரசகுமாரன் வாஹனங்கள், அலங்காரங்கள், உடைகள், இவைகளாலும் கடைக்கண் மந்தஹாஸம், பேச்சு இவைகளாலும் அண்டினவர்களுக்கு மரியாதை செய்தான். இவ்வரசன் பூமியை புயத்திலும், பிராணிகளிடத்துள்ள அன்பை உள்ளத்திலும், புராரியின் சரிதத்தை இருசெவிகளிலும் ஏற்றுக்கொண்டான். அவன் அரசாளும்போது அவனது ராஜ்ஜியத்திலுள்ளவன் ஒருவனும் தீய வழியில் செல்லவில்லை. உழாமலே விளைகின்ற செம்பாப் பயிர்களால் அலங்கரிக்கப்பட்ட இவனது பூமி, மழையையும் எதிர்பார்க்கவில்லை. அப்படியாயினும் இந்திரன் யாகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் ஹவிஸ்ஸை நினைத்துக்கொண்டு. உசித காலங்களில் மழை பொழிந்தான். அவனால் எல்லா பூமியும், பிராம்மணர்களும் தேவர்களும், ஸ்வாதீனமாகும்படி அளிக்கப்பட்டது. அவ்வரசன் கடைமுறையில் தந்தையால் உபதேசிக்கப்பட்ட அக்ஷரங்களை நினைத்துக்கொண்டு,மீனுக்ஷீரமணனின் சரணத்தைமிகவும அவலம்பித்தான். தவங்கள் புரிந்தான். அனேகத்தால் என்ன, சிவபெருமானைப் பூஜிக்கிறேன் என்ற எண்ணத்தோடேயே மூச்சுக்காற்றும் விட்டான். இவ்விதம் அம் மலயத்வஜபாண்டியன் ஸகலமான ராஜ்ய தந்திரத்தையும் நடத்திக்கொண்டு, மனோவாக்காயேந்திரியங்களால் சிவ நிஷ்டனானன்.

பிறகு ஒரு சமயத்தில் ஸந்தானமின்மையால் வருந்துகின்ற இவ்வரசன் உடனே ஸ்மரித்து எதிர்நின்றவரான அகத்திய முனிவரை மனைவியுடன்கூட அர்க்கியம், பாத்தியம் முதலான மரியாதைகளால் கௌரவித்து வணங்கி, நவரத்தினங்கள் பதிக்கப்பெற்ற பீடத்தில் அமர்த்தி அவரது கட்டளையால் அவரருகில்

உட்கார்ந்தான். பிறகு முனிவர் இவ்விதம் சொல்லத் தொடங்கினார்,—"அரசனே முன்பு உனது மனைவியான இந்தக் காஞ்சனமாலை மீனாக்ஷியை யுபாஸித்து லோகமாதாவான உனக்கும் நான் மாதாவாகவேண்டும்" என்று மற்றவர்கட்கரிதான வரத்தைப் பெற்றாள். அகையால் பூமியில் தனது அவதாரத்தைக் கருதுகின்ற அம்பாளாலேயே நீ இவளுக்குப் புருஷனாக ஏற்படுத்தப் பட்டீர். "அவ்வம்பாள் யாகாக்னியிலிருந்து உதயமாகவேண்டும்" என்று எனக்குத் தோன்றுகின்றது.—என்று

இவ்விதஞ் சொல்லப்பட்டபோது துந்துபி வாத்தியங்கள் முழங்கின. அரசனுடைய வலது கண்ணும் பட்டமஹிஷியின் இடது கண்ணும் துடித்தன. பிறகு அவ்வரசன் காஞ்சனமாலையோடுகூட அவரைவலஞ்சுற்றிவணங்கி, மயிர்க்கூச்சலிட்டவனாய்க் கூறினான்—பகவானே? அந்த லோக ஜனனீ எங்கே? இந்த அற்ப ஜனங்களான நாங்கள் எங்கே? உறவினர்களோடுகூட நான் உமக்குப் புத்திரனும் கிங்கரனுமாகிறேன். எப்படி அனுக்கிரஹிக்கின்றீரோ அப்படிச்செய்வேன்.—என்று

பிறகு முனிவர் மலயத்வஜபாண்டியனை முன்பே சதாச்வமேதங்கள் புரிந்திருந்தபோதிலும் வருங்கார்யத்தில் யோக்யதை யேற்படுவதற்காக மறுபடியும் அச்வமேதஞ்செய்யக் கட்டளையிட்டார். பிறகு உடனேயே பட்டமஹிஷியோடுகூடின மலயத்வஜபாண்டியன் பூஜாத்திரவியங்களால் அச்சுந்தரேச்வரரையும் மீனாக்ஷி தேவியையும் ஆராதித்து, அகத்தியரின் இரு சரணங்களையும் வணங்கி,முனிவர்களின் கட்டளையால்யாகஞ்செய்யத்தொடங்கினான். பிறகு இவன் குதிரையை அவிழ்த்துவிட்டு, நியமங்களை தரித்துக்கொண்டு, இக்குதிரையின் அடிதோறும் ஹோமஞ் செய்துகொண்டு, தான் யாகசாலையில் வஸித்துவந்தான். நாற்புறமும் சஞ்சரிக்கின்றதும், ராஜபுருஷர்களால் ரக்ஷிக்கப்பட்டதும், தன்னிஷ்டப்படி திரிகின்றதுமான குதிரையைத்தடுக்க ராஜஸமூகத்தால் முடியவில்லை. தைப்பூர்ணிமையில் திரும்பிவந்த அக்குதிரையை ராஜபுருஷர்கள் சிறிது நேரம்கட்டி, பட்டணத்தைக் குறித்து நடத்திக்கொண்டு, பனி காலத்தின்முடிவில் அதை சேர்ப்பித்தார்கள். சமுத்திரம் வரையுள்ள அரசர்களும் ஸகல க்வலர்களும் லோகபாலர்களும் வந்து சேர்ந்தனர். வஸந்தனும் ஆவனு

டன் வந்தான். வருடம் பூர்ணமானதும் வஸந்தனும். குதிரையோடு வந்து சேர்ந்ததும், அச்வமேத கர்மாவில் சிவபெருமானை யாராதிப்பதற்கு, முனிவர்களால் ஏவப்பட்டு அரசன் தீக்ஷை கொண்டான்.

அந்த அச்வமேதத்தில் அகத்தியர் அத்வர்யுவானார் ஆச்வலாயனர் ஹோதாவாயிருந்தார். ஜைமினி ஔத்காத்ரத்தை ஏற்றுக்கொண்டார். வஸிஷ்டர் பிர்மாவானார் பிறகு அரசன் தீக்ஷா தினங்களையும் உபஸத்தினங்களையும் தாண்டி, ஸுத்தியாதினத்தில் ஸஜ்ஜரானார். குசாசனையாலாகிய கயிற்றால் கெட்டியாகக் கட்டப்பட்ட குதிரையின் நாற்புறமும் மந்திரங்களோடு ரித்விக்குகள் தெளித்தனர். பிறகு அச்வமேதத்தைச்சார்ந்த குதிரையை சமிதாக்கள் ஆலம்பனம் (வதை) செய்தபோது, அகத்தியர் சந்திரம் என்ற மேதஸ்ஸை எடுத்து, நீர்நொச்சியின் கிளையில் கணநேரம் வைத்து, ஸ்ருவம் என்ற பாத்திரத்தின் நுனியால் யாவற்றையும் ஹோமம் செய்ய, கண்டனம் செய்தார். முனிவர் தான் ஆச்ராவணம் பண்ணி, ஆச்வலாயனத்தைச் சார்ந்த யாஜ்யாவின் முடிவில் ஸ்ருக்கின் முகமாகத்தான் ஹோமம் செய்தார். அப்போதுஜைமினி யஜமானனின் இஷ்டங்களைக்கோரிகானஞ்செய்து கொண்டு லோகமாதாவின் அவதாரத்தை விரும்பிக்கொண்டு உத்கானஞ் செய்தான். அப்போது ரித்விக்குகள் அரசனால் கொடுக்கப்பட்ட பூமியை தக்ஷிணையாக ஏற்றுக்கொண்டு, அவனை ஆசிகளால் களிக்கச் செய்தனர்.

பிறகு அவபிருதத்தின் முடிவில் அந்த அகத்தியரும், வஸிஷ்டரும், அம்பாள் அவதரிப்பதற்காக ஒரு புத்ரகாமேஷ்டியைச் செய்தனர். அவ்வரசன் எவ்வளவுக்குள் இஷ்டியைச் செய்ய ஸங்கல்பம் கொண்டானோ, அவ்வளவுக்குள் "யாகாக்னியிலிருந்து உதயமாவாய்" என்று சந்திரமௌளியால் ஆக்ஞாபிக்கபார்வதியும் பூமியில் அவதரிக்க ஸங்கல்பம் செய்தாள். அப்போது உலகம் யாவும் தெளிந்தது. பிறகு அந்த மஹரிஷி வடக்குமுகமாயிருந்துகொண்டு ஜ்வலிக்கும் அக்னியில் ஹோமம் செய்தார். அக்கணத்தில் அக்னியிலிருந்து, நீலோத்பலமாலைபோல் அழகான சோபை பொருந்தினவளும் இருகாதுகளால் இரத்தினம் பதிக்கப்பெற்ற தாடங்கங்களை அலங்கரித்தவளும் மீன்கள் போல் அசைகின்ற

கண்ணழகையுடையவளும், பிரமன், சிவன், விஷ்ணு என்ற மூன்று குழந்தைகளை ரக்ஷிப்பதற்குப்போல் மூன்று குசமண்டலங்களை வஹித்தவளும் உள்ளங்கையில் நீலோத்பலத்தால் செய்த பந்தை தரிப்பவளும் அம்மா அம்மா என்ற வார்த்தையால் அமிழ்தத்தின் சுவையை இரைக்கின்றவளும், பாதாஸத்தின் ஒலியால் அழகாக சஞ்சரிப்பவளுமான அச்சிறுமி, பட்டமஹிஷியின் மடியைத்தான் அடைந்தாள்.

அச்சிறுமியை அடிக்கடித் தழுவிக்கொள்கிறவளும், அடிக்கடி கொடுகின்றவளும், அடிக்கடி முகாரவிந்தத்தை முகர்கின்றவளும், மலர்ந்த இமைகளோடு கூடின கடாக்ஷங்களால் பார்க்கின்றவளுமான அவ்வன்னை சந்தோஷத்தை அடையவில்லை. (பார்க்கப் பார்க்க போதும் என்று உபரதியடையவில்லை.) பிறகும் மனைவியால் கொடுக்கப்பட்டுத் தழுவிக்கொள்ள விழுகின்றவளும் அமிழ்தம் நிறைந்தவள் போன்றவளுமான அப்பெண்ணை அரசன் எடுத்துக்கொண்டு மோக்ஷத்தையும் பில்லுக்குச் சமமாய் எண்ணினான். குழந்தையின் மார்பில் மூன்று ஸ்தனங்களைப் பார்த்த அந்த தம்பதிகள் எவ்வளவுக்குள் சிறிது கலங்கினார்களோ, அவ்வளவுக்குள் ஆகாயத்தில் ஒரு வாக்குக் கிளம்பிற்று—

"எப்போது மணையாளன் தடாதகையென்ற உனதுபெண்ணைப்பார்ப்பானோ, அப்போது இந்த மூன்றாவது ஸ்தனம் நிச்சயம் உள்ளே மறைந்து போய்விடும்," என்று.

காஞ்சனமாலையுடன் கூடின அம்மலயத்வஜபாண்டியன் அமிருதரஸம் பெருகவிடுகின்ற அவ்வாச்சர்யமொழியைச் செவியுற்று, வேள்வியை முடித்து பரதெய்வமான அப்பெண்ணை குலகுருவின் கையில் கொடுத்து, அவர் திருவடிகளை பிடித்துக்கொண்டான். அம்முனிவர் கையில் கிரஹிக்கப்பட்ட வேதாந்த வித்யாரூபியான அப்பெண்ணை முனிவர்களின் பொருட்டு, வார்த்தை சொல்லாமல் ஆனந்தக்கண்ணீராலும், மயிர்க்கூச்சலாலும் தெரியப்படுத்தினார். அப்போது லோகமாதாவின் அவதாரகாலத்தில் ஸகல உலகமும் கலக்கம் நீங்கப்பெற்றும், மோஹம் தணிந்தும், ஆனந்த அலைகளால் நிறைந்ததுமாயிற்று.

தடாதகஜனனம் என்ற முதலாவது தரங்கம் முற்றிற்று.

K. V. சுப்பிரமணியசாஸ்திரிகள்.

# ஆரியாசார ரகஸ்யம்.

## பும்ஸுவன இரகஸ்யம்.

பும்ஸுவனத்திலுள்ள ரகஸியமிது. சரீரத்தில் ஒன்றிலேயே ஸ்திரீபாகம் என்றும், புருடபாகம் என்றும் இருவகைபாம். புருடசரீரம் நல்ல முதிர்ச்சியின் பயன். சிறிது முதிர்ச்சி குறைந்த விந்து ஸ்திரீ சரீரமாம். நன்கு புருடசரீரத்திலேயே அடைய வேண்டிய பாகத்தை முற்றும்பெற்றவிந்து, அங்ஙனம் பரிபூரண பாகம்பெற்ற புருடசரீரத்தேயுண்டாம். பெண் சரீரமோ சிறிது பாகம் குறைந்த விந்துவில் சிறிதுபாகம் குறைந்த சரீரத்தில் உண்டாவது. இடதுபுறம் ஸ்திரீபாகமாம். வலதுபுறம் புருடபாகமாம். வலதுபுறத்தில் ஆமாசயம் முதலியன வின்மையின் அவிடம் சுத்தாத்தம் உள்ளே விடமாம். இடதுபுறத்துக்கு மலம் அதிகம். இவ்விஷயத்தை வேறிடம் காண்க. இம்மகா ரகஸியத்தில் இப்பொழுது விசாரிக்கவேண்டியது இது. "புருட சரீரத்திலேயே ஆண் பெண் பேதம்" என்பதே. இருதயம் ஒவ்வொரு பிந்துவுக்கும் ஓர்வகை அமைப்பை உண்டாக்குவதாய்ச் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. யுக்தியால் அவ்விதம் சித்திப்பதுமன்றி சோதனஞ்செய்துழியும் ஐந்து பிளைகள் உள்ளதே விந்துவில் ஒரு சிறுகுரு அகப்படுகின்றது. இங்குகிரமம் இது. புசிக்கப்படும் பொருள்களெல்லாம் கிரமமாய்ப் பரிபாகம்பெற்று ரத்தமாகிறது. அதுவும்பாகம்பெறும்பொழுது அதில் சாரதாமான அம்சம் மெள்ள அந்தவிடம்விட்டுக் கீழே நழுவும். அது பீஜத்தில் இருக்கும் இரு விதைகளிலும் வந்து தங்கும். அது இடது பக்கத்தில் இறங்கினுல் அவ்வளவு பக்குவப்படாது. வலதுபுறமானுல் பக்குவம் அதிகமாம், இடது புறத்தில் இருதயம் ஆமாசயம் மலாசயம் இருப்பதாலென்க. தென்புறத்துக்கு வருவது சுத்தாத்தமேயாதலால் அங்கு அதன் பரிபாகம் மிகுமாம். இருபுறமும் சுக்கிலம் நிறைந்திருக்க, அது ஆண் பெண் கூடுங்காலம். அவ்விருவர் பாவமும் ஒன்றுபடும் தருணம் இருவர் மனத்திலும் இருவர் உருவங்கள் ஒன்றில் ஒன்றுகப் பிரதிபலிக்கும் அப்பொழுது புமான் இருதயத்தில் தனஞ்சயன் என்ற வாயு அதை இதயம் சேர்க்கும். அது சரீரம் எல்லாம் வியாபித்து நின்று அதுபோன்றதாய் உள்

ளது. சுருக்கமும் பெருக்கமும் உடையது. அந்த இதயத்தில் அது வத்தால் விரிந்து குவியும். இதயத்தால் அந்த விந்து ஐந்து பிளைகள் அமையப்பெறும். ஐந்து துளைகளுடன் கூடிய செந்நிறமான மாம்ச பிண்டமே இதயமென்பது வைதிகர் கொள்கை. அதில் மேல் இருக்கும் துளை மிகச் சிறியது. ஆகையால் மேல் பிளையான தலை மற்றைய பிளைகளிலும் சிறியதாம். கைகால் நீளும், அச்சமயம் அதிற்றனே பாவனுமயமான பிரதிபலன் உண்டாகும். ஆகையாற்றன் அனேகமாய்த் தகப்பன் முகம் பிள்ளைகளுக்குண்டாகிறது. அது சூக்ஷ்மமாய் அந்த சரீர வளமையையே அவ்விந்துவில் அமைக்கின்றது. அதிக காமுகனுக்கு மனதில் ஸ்திரீபாவனையே சம்பாவிதமாகையால் பெண்ணுருவம் படியும். அவனுக்கு ஸ்திரீபாவனையேயிருந்தால் அச்சமயம் இடதுபுறத்துச் சுக்லம் வெளியேறி பீஜத்தினின்று இதயம்வரும். அங்கு ஐந்துபிளையமையும். ஆதலால் புமானுடைய பீஜத்திலேயே விந்து பாகத்தையடைவதாம். இதயத்திலேயே ஐந்து பிளையுண்டாவதாம். அனேகமாய்ச் சிறுமிகளிடத்தில் காதலால் ப்ரவர்த்தியே அதிகமாதலால் அந்த ஸமயம் அது போன்றே நிற்பது மனதின் இயல்பாதனல் அநேகமாய் உற்பத்தியாவதெல்லாம் பெண்களாம். இதற்குக் காரணம் "பெண்களுக்குக் காமம் அதிகமாதலால்" என்று கற்பவுபநிடதம் கூறியது. இதன் கருத்து பெண்களில் காமாதிக்யத்தால் அவர் திருவுருவம் புருடர் மனதில் பதிந்து அவ்வாறு உருமாறிய காலத்தில் அதனிடமே அந்த ரூபம் உண்டாம் என்பதே. அநேகமாய்ப் பெண்கள் கர்ப்பத்திலும் போய் மூன்று மாசங்கள்வரை நன்றாய் ஆண் பெண் பேதம் வெளிப்படையாகாது பற்றி பெண்களின் சரீரத்திலும் பிரதமகர்ப்பத்தில் பும்ஸவனம் என்ற கிரியை கர்ப்பத்தை ஆணுக்கச் சிற்சில பச்சிலைகளைக்கொண்டு செய்யப்படுகின்றது. அக்காரணம்பற்றியே அக்கன்மம் "பும்ஸவனம்" எனப்படும். ஸூத்திரகாரர்களும் அதற்குப் பிள்ளைபிறப்பதே பலம் என்றூர். மேலும் பெண்களிடத்தில் காமாதிக்யத்தால் பிரவிருத்தி சுபாவம் சிலருக்கே ஸந்தானர்த்தமாம். ஆகையால் எங்கும் பெண்கள் நிறைந்திட நேருமாதலால் அதைத் தடுக்கவே எந்தக்காலத்தில் பெண்களுக்கு வீரியம் அதிகமாகும். எச்சமயம் அவர்களுக்கு காமம் ஏற்படும், அச்சமயங்கள் எல்லாம் புருடருக்கு ஸ்திரீசம்

பந்தத்துக்கு முக்கியமாக எடுக்கப்படவில்லை. பரிபாக மிகுதியால் புருடன் பிறப்பான் என்றேம். பெண்கள் சரீரத்தை வேருகக் காட்டக்கூடியன இருபது பேசிகளாம். அவை புருடசரீரத்துக்கும் அமைப்புமாத்திரையில் உள்ளனவேயாம். ஆயின் அவை அமைப்புமாத்திரத்தில் சூக்ஷ்மமாயுங் கடினமாயும் இருக்கும். இவ்வளவே ஆண்பெண் சரீரபேதம். "விதைபோலிருக்கும்மிளை" என்ற பழமொழிப்படியே பீஜஜாதியே அங்குர (மிளை) சாதியாவதுசிதம். ஆகவே, நல்லபீஜம் (விதை) நன்கு விளையும். அதற்குத்தக்க தேசகாலாதிகளும் பரிபாகமும் வேண்டுவதே. உலகத்தில் எல்லா பீஜங்களும் முற்றிலும் உலர்ந்தாலும் மிளையா. ஈரமிருந்தாலும் மிளையா. அவற்றிற்கு மினத்துக்கேற்றபடி பரிபாகம் உண்டு. நன்குகாய்ந்த விதையே மிளைக்கும் என்பது பொதுவிதி. பாக்கு முதலியன முற்றும் காய்ந்தால் மிளையாவாம். அங்ஙனம் நீண்டகாலம் சென்ற யவதான்யமும் மிளைப்பதில்லை. இங்ஙனம் பீஜஜாதிவேற்றுமையால் சிலகாலத்தானே மிளைப்பன. கருணை, இஞ்சி முதலியவற்றைப்போல இடத்தாலும் சில மிளைக்கும். உதாரணமாக.-நெல்லு முதலியனநல்லசேற்றில்விளையும். புழுதியில்விளையாது. காற்றுகுளிர்ந்தடித்தாலும் சிறிது மழைபெய்தாலும்அதுமட்டால் எள்ளுபயறுமுதலியனமிளைக்கும். நீர் அதிகமானல்அழுகும். கொள்ளுகொத்தமல்லி, பெரும்பருத்தி, சீரகம் இவை சீக்கிரம்மிளையா. ஐந்துதினங்கள்முதல்ஒருமாதம்வரைமிளைக்கும்விதைகளுமுண்டு. இங்ஙனம் எவ்வளவு பாகம் பெறவேண்டுமோ அவ்வளவு பாகத்தையும் புருட சரீரத்திலேயே பெற்றவித்து பிள்ளையாகவே பிறக்கும். இவ்விதபாகம் முற்றுப்பெருவது மூன்றுமாதங்களில் என்று கண்டனர் முன்னேர். ஸ்திரீ கருப்பம் ஒன்பது மாசங்களையும் கூட்டினல் ஆகமொத்தம் வருடமொன்றும் என்றுர் ஸூத்திரக்காரர்கள். ஆகையால் பிறந்ததுமுதல் எழு வயதானல் அதை கர்ப்பத்தினின்றி எட்டென்றுர் பெரியோர். பெண்களுக்கும் கருப்பவாஸம் ஒருவருடமேயானலும் தகப்பன் சரீரத்தில் பத்து தினங்கள் குறைவும் பெண்கள் சரீரத்தில் பத்துதினங்களதிகமுமாம், ஆதலாற்றுன் கருப்பகாலம் மிகுதியானல் பெண் பாலர் பெண்பிறக்கும் என்பர். அங்ஙனமே யனேகமாய் அநுபவமுமாம். எப்படியாயினும் கர்ப்ப பூர்த்திகாலம் 280 தினங்களுக்கு மேலாவதில்லை. கருப்பந் தரித்ததுமுதல் குறித்தகாலத்திற்கு

மேல் கருப்பம் இருப்பதே] அசாத்தியம். அதனாற்றான் ஆசரும் இறந்த ஒருவனுக்கு பாரியை 280 தினங்களுக்குட்பட்டுப் பிரஸவிப்பதே இவன் சந்ததி எனலாம் என்பர். அடுத்த நாளாகில் இறந்தவனதுகருப்பமாகாதென்பர். பூரண புருடகருப்பத்துக்கு நாள் கருத்தரித்ததுமுதல்—265 தினம்முதல் 275 தினம்வரை பெண்களுக்கு ஐந்துதினங்கள் கூடவேயாம். ஆகவே க்ஷேத்திரத்தில் செய்யும் உழமெல்லாம் விதையை நன்கு விளையச்செய்யுமாதலாலும் நல்லவிதையே நற்சாதியாமாதலாலும், நன்னிலத்தில் நல்ல விதைசேர்ந்து நற்பயிற் விளையவேண்டிய க்ஷேத்திரம் பீஜம் இரண்டும் நல் வழிப்படவே பல நியமங்கள் சொல்லப்பட்டன. இவையெல்லாம் நல்ல சந்ததியை எதிர்பார்க்கும் பெரியோர்க்கே உதவுவனவாம்.

இனி க்ஷேத்திரத்தை ஆரியர் காப்பாற்றும் சாமர்த்யத்தை இங்கு நிரூபிக்கின்றோம். இவர் வெகுகாலமாய் பிரமவித்துக்களான ரிஷிகளின் சந்ததியைக் காப்பாற்றமுயன்றவராய் வெகு ஜாக்கிரதையாய் க்ஷேத்திரத்தைக் காப்பாற்றிவருகின்றனர். அதனாற்றான் ஆசிரியர் ஆபஸ்தம்பரும்

अप्रमत्ता रक्षन्तुतन्तुमेतं मावःक्षेत्रेपरबीजानि वाप्सुः ।

"சிறிதும் தவறாது க்ஷேத்திரத்தைக் காப்பாற்றுங்கள், உமது க்ஷேத்திரத்தில் இதரர் தமது விதையைவிதைக்காது ஒழிவாராக" என்றார். அப்படியே மனுவும்

अरक्षिता गृहे रुद्धाः पुरुषैराप्तकारिभिः ।
आत्मानमात्मनायास्तु रक्षेयुस्तास्सुरक्षिताः ॥

பெண்களை வீணில் நிர்ப்பந்தம் செய்வதிற் பயனில்லை. அவரவர்கள் தன்னைத்தான் ரக்ஷித்துக்கொண்டால்தான் பூர்ணரக்ஷையாகும் என்றார். இதிலுள்ள ரகசியமிது. இடமும் விதையும் சேர்ந்து முளையுண்டாக்குவது உண்மையாயினும் சேதனக்ஷேத்ரமாகிய மானுஷக்ஷேத்திரத்தில் ஓர்வகை விசேஷமுண்டு. அதனாற்றான் சத்சந்தானத்தை அபேக்ஷிக்கும் ஒவ்வொருவரும் அந்த க்ஷேத்திரத்தை விசேஷமாகக் காப்பாற்றுகிறார்கள். எதுவரையில் நமது தேசத்தில் தவறில்லாமல் பீஜம் பரிபாகப்படுவது குலையாமல் நின்றதோ, அதுவரையில் இத்தேசத்தின் நிலைமை வேறு, கலி

காலக்கொடுமையால் அதுஇக்தேசத்தில் குறைந்தமையால் க்ஷேத்திரத்தை ரக்ஷிகக இப்பொழுது பரிபூர்ணசிரத்தை எல்லோருக்கும் உண்டாயிருக்கிறது. க்ஷேத்திரத்தை கவனிக்காது தவப்பரிபாகத்தால் முற்காலத்தில் கருணை முதலிய கிழங்குகளின் முளை முளைப்பதுபோல் அயோனிஜபுத்திரர்கள் உற்பத்தியாயினர். அவர்களுக்கு ஒவ்வோரிடம் வ்யாஜமாத்திரமாய் க்ஷேத்திராபேக்ஷையுண்டு. அது குறைந்தபிறகு க்ஷேத்திரப்ராதானியமே விர்த்தியடைந்தது. அதுவே அக்ஷேத்திரத்தினிடத்தில் அதிக சிரத்தை வைக்கக் காரணமாயிற்று. அதனுற்றான் அதிசமீபகாலத்தில் பெண்களுக்குப் பல நியமங்கள் விதிக்கப்பட்டன. அறிஞர்காள்! சிறிது கவனியுங்கள். ஸப்தபதீசம்ஸ்காரத்தில் "உனது சினேகத்தை யான் விடேன், எனது சினேகத்தை நீ விடாதே" என புமான் செய்யும் இருவகை பிரதிஞ்ஞை இருக்கின்றது. மேலும் தானமந்திரத்திலும் "தர்மார்த்தகாமங்களில் நீ இவளை தவிர்த்திடாதே" என கொடுப்பவன் பிரார்த்தனையொன்றிருக்கிறது. ஆயின் தர்மார்த்தகாமங்களில் பெண்கள் இல்லறத்தவர்க்கு ஏற்ற துணையாதலால் அவர்களை எவ்வழியிலும் காமத்தில் மீறுதல் கூடாது. இதை மீறினுல் பிரதிஞஞாலங்கனம் பெரியதாய் இருவருக்குமுண்டாம் என்பதிற் றடையில்லை. ஆயினும் வைத்தியசாஸ்திரத்தை யறிந்தோர் அக்குற்றத்தைப் பெண்களிடம் மிகவதிகமெனக் குறிப்பார். ஒரு மகாகாமுகன் காமத்தால் விபசரித்தால் அவனுக்கு பிரதிஞ்ஞாபங்க குற்றம் வருகின்றது. அன்றியும் விவாகமில்லாதவன் அதைச்செய்தால் மற்றவரை மோசஞ்செய்த குற்றத்திற்காளாவான். ஆயின் இருவகையும் அது குற்றமுள்ளது. இது பெண்களிடத்தும் சமானம். ஆனுல் அவர்களிடத்து விசேஷமுண்டு. ஆண்மக்களுக்கு பச்சாத்தாபம் வந்தால் பிராயச்சித்தமுண்டு. பெண்களுக்கு அக்குற்றமுண்டானுல் பிராயச்சித்தம் செய்வது சாத்தியமில்லாமையால் அவர்கள் சகவாசத்தை ஒழித்திடவேண்டியதே முக்கியம். எனசாத்தியமெனிற் கூறுதும். பரஸ்திரீ கமனம் செய்த பாபிகளான புருடருக்குப் பச்சாத்தாபம் நேர்ந்திட எவ்விதத்தாவது சரீரத்தில் பரஸ்திரீயினம்சமில்லாமையால் மனோபாவதோஷத்திற்க்க பிராயச்சித்தரூபமான சிகிச்சை ஒன்று செய்யலாம். (தொடரும்)

ஆரியன்.